**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**முகாமைத்துவ கற்கைகள் பீடம்**
**முயற்சியாண்மையும் சிறு வணிக முகாமைத்துவமும் உயர்தர சான்றிதழ் கற்கை நெறி**
**OSC2402 – சிறு வணிகத்தை முகாமை செய்தல்**
**இறுதிப் பரீட்சை- 2023/2024**

**காலம்: இரண்டு (2) மணித்தியாலம்**

*திகதி: 17 ஆகஸ்ட் 2024* *நேரம்: பி.ப 1.30 – பி.ப.3.30*

**அறிவுறுத்தல்கள்:**
- **ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம்** விடையளிக்குக,
- அனைத்து வினாக்களும் சமமான புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

1. a) "சிறு மற்றும் நடுத்தர வணிக அமைப்புக்கள் (SME) நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றுகின்றன" இக்கூற்றை பொருத்தமான உதாரணங்களுடன் ஆராய்க.

(10 புள்ளிகள்)

b) ஒரு நபர் சொந்தமாக வணிகத்தைத் தொடங்கும் போது இடர்களுக்கு முகம்கொடுக்கும் சாத்தியக்கூறுகள் அதிகம். இருப்பினும், இன்றைய இளம் தலைமுறையினர், பிறரின் சிலரின் கீழ் ஊழியர்களாக பணியாற்றுவதை விட தங்கள் சொந்த தொழிலைத் தொடங்க அதிக விருப்பம் காட்டுகின்றனர். ஒரு தனிநபர் இடர்களுக்கான சாத்தியங்களை அறிந்தும், தனது சொந்த வணிகத்தைத் தொடங்க விரும்புவதற்கான காரணங்களை ஆராய்க.

(15 புள்ளிகள்)

2. உங்கள் நண்பர் ஒருவர் தனது சொந்த மூலதனத்தைக் கொண்டு புதிதாக ஒரு சிறு வணிகத்தைத் தொடங்கி 15 ஊழியர்களை நியமித்துள்ளார் என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் சிறு வணிக முகாமைத்துவத்தைக் கற்றிருப்பதால், வணிகத்தின் வெற்றிக்கு உங்கள் நண்பர் உங்கள் ஆலோசனையைப் பெறுகிறார். உங்கள் நண்பருக்கு நீங்கள் வழங்கக்கூடிய ஆலோசனைகள் யாவை?
உங்கள் ஆலோசனையானது, குறைந்தது நான்கு (04) வணிகம் தொடர்பான முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாக இருப்பதோடு, அவ் ஆலோசனையை நீங்கள் வழங்குவதற்கான காரணிகளையும் விளக்குக. (25 புள்ளிகள்)

3. a) பிற நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் காணப்படும் சிறு மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள் எதிநோக்கும் சவால்களை உதாரணங்களுடன் ஆராய்க.
(10 புள்ளிகள்)

b) நிஜ உலக உதாரணங்களை மேற்கோள் காட்டி உலகின் தொழில்நுட்ப வளர்ச்சியானது, இலங்கையின் சிறு வணிகங்கள் தங்களது வணிகத்தை

விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகளை எவ்வாறு ஏற்படுத்தியுள்ளது என்பதை சுருக்கமாக ஆராய்க. (15 புள்ளிகள்)

4. a) ஹென்றி மிண்ட்ஸ்பெர்க் (Henry Mintzberg) விவரித்தபடி ஒரு முகாமையாளரின் மூன்று (03) முக்கிய வகிபாகங்களை, உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

   b) ஒரு முகாமையாளராக, மேலே குறிப்பிட்டுள்ள வகிபாகங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற நீங்கள் கொண்டிருக்க வேண்டிய திறன்கள் யாவை? ஆராய்க. (15 புள்ளிகள்)

5. a) சிறு மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு, திட்டமிடல் (Planning) என்பது எவ்வாறு முக்கியமென்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

   b) "ஒரு சிறு வணிகத்திற்கு சிறந்த முறையில் உருவாக்கப்பட்ட திட்டம் போதுமானது, பிற முகாமைத்துவ செயல்பாடுகளில் (Management Function) கவனம் செலுத்த வேண்டிய அவசியமில்லை". மேற்கூறிய கருத்துடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? உங்கள் விடையை நியாயப்படுத்துக. (15 புள்ளிகள்)

*-பதிப்புரிமைக்குரியது-*